உங்கள் இல்லங்களில் நிகழும்
மங்கள நிகழ்வுகளின் நவீன முறை வீடியோ படப்பிடிப்பிற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

பக்கம் நான்கு

# உதயன்

விலை ரூபா 5-00

வீடியோ கமரா, T. V. வீடியோ டெக் ஆகியவற்றை
உத்தரவாதத்துடன் உடனுக்குடன் திருத்திக் கொள்வதற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 30 புதன்கிழமை (15 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 19

# போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தீர்வை முன்வைக்க அரசுக்கு நெருக்குதல்

## பூநகரித் தோல்வியின் விளைவாக தெற்கில்சிறு அழுத்தம் ஆரம்பம்

கொழும்பு, டிசம்பர் 15

வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று அரசாங்கத்திற்கு நெருக்குதல்கள் வரத் தொடங்கியுள்ளன;

இந்த வகையில் எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவும், அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் வண சந்தானந்தரும் —

வடக்கு - கிழக்குப் போரையும், அங்குள்ள மக்களின் பிரச்சினையையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் அரசியல் தீர்வு ஒன்றை முன் வைக்க வேண்டும் என்று — வலியுறுத்தி உள்ளனர்;

தற்போதைய போரை அரசே தொடங்கியது ஆகையால் அரசாங்கமே அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் திருமதி பண்டார நாயக்கா தெரிவித்திருக்கிறார்;

பூநகரித் தோல்வியைத் தொடர்ந்து இராணுவத் தீர்வு சாத்தியப்படாது என்ற கருத்து தெற்கில் அரசு தவிர்ந்த ஏனைய வட்டாரங்களில் சிறிய அளவிலாவது அரும்பத் தொடங்கியுள்ளதாக அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எதிர்க் கட்சித் தலைவியையும் மாக நாயக்க தேரரையும் தொடர்ந்து மற்றும் பலரும் பொது நிறுவனங்களும் அரசுக்கு நெருக்குதல் கொடுக்கும் வாய்ப்பு உண்டென்றும் கூறப்படுகின்றது.

தற்போதைய போரை அரசே தொடங்கியது ஆகையால் அரசாங்கமே அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ பரீட்சை இன்றுடன் முடிவு

கடந்த ஆறாம் திகதி ஆரம்பமான ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சை இன்றுடன் முடிவடைகிறது.

இந்தப் பரீட்சையின் விடைத்தாள்களை 'மார்க்கோ' கப்பல் மூலம் கொழும்பு அனுப்பும் முயற்சியில் யாழ். கல்வி அலுவலகம் ஈடுபட்டுள்ளது. (இ-5)

## கோமாரியில் செல்லவிருந்த பயணிகள் மார்கோவில்

யாழ்ப்பாணம், டிச. 15

கடந்த வாரம் கோமாரி கப்பல் மூலம் கொழும்பு செல்லப் புறப்பட்டு பின்னர் அனுமதி கிடைக்காததால் செல்ல முடியாமற்போன 50 பயணிகளை 'மார்கோ' கப்பல் மூலம் அனுப்ப ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார்.

தற்சமயம் இங்கு வந்துள்ள 'மார்கோ' கப்பல் இம்மாதம் 25 ஆம் திகதியளவிலேயே கொழும்பு திரும்பிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-162-5)

## வாதுவ புறப்பாடு தாமதம்

'வாதுவ' கப்பல் பருத்தித்துறையில் இருந்து கொழும்பு புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

அந்தக் கப்பல் இன்று புறப்படும் என எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால் கப்பலில் உள்ள சுமார் 300 மெற்றிக் தொன் மாவை காங்கேசன்துறையில் களஞ்சியப்படுத்துமாறு பணிக்கப்பட்டிருப்பதை அடுத்து கப்பல் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

கப்பல் புறப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் — இந்தக் கப்பலில் பயணம் செய்ய இருந்த பயணிகள் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறும் மேலதிக அரச அதிபர் திருமதி. ப, திலகநாயகம்போல் கேட்டுள்ளார்.

அதே சமயம் இந்தக் கப்பல் இன்றும் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிவிட்டு நாளை காங்கேசன்துறைக்குச் சென்று தீவுப் பகுதிக்கான 300 மெற்றிக் தொன் மாவை அங்கு இறக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் வெள்ளி அல்லது சனிக்கிழமையே இந்தக் கப்பல் கொழும்பு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-162-5)

### பூநகரித் தாக்குதல் செய்தி

## ஐரோப்பிய நாடுகளின் பத்திரிகைகள் முக்கிய இடம்

யாழ்ப்பாணம். டிச. 15

விடுதலைப் புலிகளால் பூநகரி கூட்டுத் தளம் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பான செய்திகளை ஐரோப்பிய நாட்டு பத்திரிகைகள் பலவும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுள்ளன.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த 'பீவர்' என்ற பத்திரிகை, தமிழீழ விடுதலைப் புலிகள் மெதுவாக ஆனால் பலமாக முன்னேறி வருவதாக சுட்டிக் காட்டி தலைப்புச் செய்தி ஒன்றை வெளியிட்டது.

''பத்து வருட காலத்தில் இடம்பெற்ற மிகப்பெரும் தாக்குதல்'' என்று அங்கிருந்து வெளியாகும் மற்றொரு பத்திரிகை பூநகரித் தாக்குதலை வர்ணித்துள்ளது. (இ-5)

## பலாலியில் இருந்து இரவு நேர ஷெல்!

### ஒருவர் காயமடைந்தார்

யாழ்ப்பாணம், டிச. 15

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை ஒரு மணி அளவில் சுற்றுப்புறக் குடியிருப்புக்களை நோக்கி பரவலாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன

மல்லாகம் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் வீட்டுக்குள் படுத்திருந்த ஒருவர் காயமடைந்தார்.

ஜயம்பிள்ளை பாலச்சந்திரன் (வயது 38) என்பவரே காயமடைந்தவராவார்.

இவரது வீட்டுக்கு அருகில் இரு ஷெல்கள் விழுந்தன என்றும் —

முதலாவது ஷெல்லின் போது நித்திரையில் சிறுகாயம் அடைந்த இவர், விளக்கைக் கொளுத்த முயன்ற போது இரண்டாவது ஷெல் விழுந்து வெடித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-15)

## மாகாண சபை உறுப்பினர் கடத்தல் மர்மம் நீடிக்கிறது

கொழும்பு, டிச. 15

கடந்த வாரம் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட தென் மாகாண சபையின் பொது மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர்களில் ஒருவரான விமல்பிரான்ஸிஸ்குவை ஆளுங்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் சிலர் பலாத்காரமாக தடுத்து வைத்துள்ளதாக அவரது மனைவியான திருமதி நந்தா விமல் பிரான்ஸிஸ்கு சத்தியக் கடதாசி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி கல்கிசை ரோயல் மவுண்ட் ஹோட்டலில் தன்னை ரகசிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்திலும் பூநகரி வெற்றிவிழா

யாழ்ப்பாணம், டிச. 15

பூநகரி கூட்டுத் தளத்தின் மீதான 'தவளை' தாக்குதலின் வெற்றிநாள் நிகழ்ச்சிகள் கடந்த 11 ஆம், 12 ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்தின் பல இடங்களிலும் பிரதேச மட்டத்தில் நடைபெற்றன.

மடு, பள்ளமடு, முழங்காவில், அடம்பன், நானாட்டான் ஆகிய இடங்களில் நடைபெற்ற வெற்றிநாள் நிகழ்ச்சிகளில் மக்கள் எழுச்சியுடன் கலந்துகொண்டனர். (இ-5)

### யார் பொறுப்பு?

## குடாநாட்டுக்கு 2 மாதங்கள் வெளியூர் தபால் வரவில்லை!

### மக்களின் வெளித் தொடர்பு துண்டிப்பு

யாழ்ப்பாணம், டிச. 15

கடந்த சுமார் இரண்டு மாதங்களாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளிமாவட்ட, வெளிநாட்டுக் கடிதங்கள் எதுவும் எடுத்துவரப்படவில்லை.

எதிர்வரும் நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைக் காலத்தை முன்னிட்டாவது கடிதங்கள் வெளியிலிருந்து வந்து சேருமா என்பது குறித்து நம்பிக்கையான தகவல் எதுவுமில்லை.

கடந்த ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதிக்குப் பின்னர் வெளிமாவட்ட, வெளிநாட்டுத் தபால்கள் எதுவும் குடாநாட்டுக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் யாழ். மாவட்ட மக்களுக்குரிய ஒரேயொரு வெளித் தொடர்பு வசதியும் துண்டிக்கப்பட்டுள்ளது.

வெளி மாவட்டங்களில் உள்ள உறவினர்களுடன் எவ்வித தொடர்பும் கொள்ள முடியவில்லை. வெளிநாடுகளில் உள்ள உறவினரிடமிருந்து தகவல்கள் எதுவுமில்லை; பணமும் இல்லை. கொழும்பில் வெளியாகும் வேலைவாய்ப்பு பற்றிய தகவல்களை அறிய முடியாது மாணவர்கள், இளைஞர்கள் இருட்டில் உள்ளனர்.

மக்களின் இந்தக் கஷ்டங்களுக்கு யார் பொறுப்பு? கொழும்பில் உள்ள அதிகாரிகளின் அசமந்தப் போக்கா? அல்லது இங்குள்ள தபாற் பகுதி அதிகாரிகளின் ஊக்கமின்மையா? — என்று பொது மக்கள் பலரும் உதயனிடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தியசாலை விடுதியில் தங்க டாக்டர்கள் அச்சம்

யாழ்ப்பாணம், டிச. 15

பாதுகாப்பு வலயத்துக்குள் படையினர் ஷெல் தாக்குதல் நடத்துவதால், இரவு நேரங்களில் யாழ். போதனா வைத்தியசாலையின் மேல் மாடி விடுதியில் தங்குவதற்கு டாக்டர்கள் அஞ்சுகின்றனர்.

தமக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்றும் —

இதனால் தமது விடுதியை வேறு ஓர் இடத்துக்கு மாற்றி தருமாறு அவர்கள் வைத்தியசாலைப் பணிப்பாளரைக் கேட்டுள்ளனர்.

வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று டாக்டர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

டாக்கடர்களின் கோரிக்கைக்கு அமைய வைத்தியசாலை விடுதியில் தங்கும் டாக்டர்கள் இன்று முதல் சுபாஸ் ஹோட்டலில் தங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார். (இ-15 17)

## ஜே. ஆரின் வேண்டுகோள்; கிரிக்கெட் சபை நிராகரிப்பு

கொழும்பு, டிச. 15

அண்மையில் நடந்த இலங்கைக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது டெஸ்ட் போட்டியை கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் நடத்தும்படி அதன் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்னா விடுத்த வேண்டுகோளை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிராகரித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலாவது டெஸ்ட் போட்டி மொறட்டுவ விளையாட்டு மைதானத்திலேயே நடத்தப்பட்டது

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரும் தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சருமான டிரோன் பெர்ணான்டோ இது பற்றி விளக்கமளிக்கையில் —

இலங்கை கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே மொறட்டுவவில் முதல் டெஸ்ட் போட்டியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டதென்றும் —

இதில் அரசியல் நோக்கம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். (த-6)

## ஐ.தே.க. கிளைகளாக பள்ளிவாசல்கள்

### அஷ்ரப் குற்றச்சாட்டு

கொழும்பு, டிச 15

நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள் இன்று ஐ. தே. கட்சியின் கிளைகளாக இயங்குகின்றன. பள்ளிவாசல்கள் அரசியல் கலப்பின்றி இயங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் எம்.எச்.எம். அஷ்ரப்.

கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு நாடாளுமன்றத்தில் உரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நீதி வழங்க நியமிக்கப்பட்டவர்கள் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர்.

கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு முஸ்லிம் மாணவர்களை அனுமதிக்கும் விடயத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பாரபட்சமாக நடக்கிறது — இப்படி அவர் தெரிவித்தார். (இ-5)

### முச்சந்தி முரளி



தவறு அங்கேயா? அல்லது இங்கேயா? முதலில் கண்டு பிடிக்க வேணும்பாருங்கோ...!

## சு. க. அதிருப்தியாளர்கள் தினேஸுடன் சேர முயற்சி?

கொழும்பு, டிச. 15

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள அதிருப்தியாளர்கள் மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஸ் குணவர்த்தனாவுடன் இணைந்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பது குறித்து தீவிரமாக சிந்தித்து வருவதாக சிங்கள வார இதழான 'லத்திவ' செய்தி வெளியிட்டுள்ளது.

'ஹெல உரிமை' இயக்க ஆதரவாளர்கள், அநுரா ஆதரவாளர்கள் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பல கூறுகளாகப் பிரித்து நிற்பது தெரிந்ததே.

எதிர்கட்சிகள் வரிசையில் உள்ள அரசியல் வாதிகளின் மத்தியில் நாட்டுக்கு தேவையான மக்கள் தலைவராக தினேஷ் இருப்பதாகவும், அதனாலேயே அவரை தலைவராகத் தெரிவு செய்ய முடிவு செய்துள்ளதாகவும் புதிய கட்சியை அமைக்க உள்ள எம் பிக்களின் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## மட்டக்களப்பு தமிழரை தேடி வேட்டை

கொழும்பு, டிச 15

மட்டக்களப்பு காத்தான்குடி, ஆரையம்பதியைச் சேர்ந்த குட்டான், நீலன் ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் சின்னத்தம்பி சோமநாதன் என்பவரைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது

பல கொலைகளை இட்டமிடுவதில் பங்குபற்றியது தொடர்பாக விசாரிப்பதற்காக இவர் பொலீஸாரினால் தேடப்படுகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-162)

## விமான ஓட்டம்

யாழ்ப்பாணம், டிச. 15

யாழ். குடாநாட்டில் நேற்று விமானங்களின் ஓட்டம் வழமையைவிட அதிகமாக இருந்தது. (இ-162-15)

# ப.நோ.கூ.ச. பிரதிநிதிகள் நேற்று செயலகத்தில் 2 மணி நேரம் மறியல்

### மேலதிக அரச அதிபர் வாக்குறுதியின் பின் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 15

யாழ். மாவட்டத்தில் உள்ள 22 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், நெறியாளர்கள் இணைந்து யாழ். செயலக சமூக சேவை அலுவலகம் முன் நேற்று இரண்டரை மணி நேரமாக மறியல் போராட்டம் நடத்தினர்.

யாழ். மேலதிக அரச அதிபர் அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்து காலை 10.30 மணியுடன் மறியல் கைவிடப்பட்டது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். செயலக சமூக சேவைப் பகுதி செலுத்த வேண்டிய பல லட்சம் ரூபா பணம் தொடர்பாக எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் ஏற்ற மாற்று நடவடிக்கை [illegible] மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்மினி திலகநாயகம் மறியலில் ஈடுபட்டவர்களுக்கு அளித்த உறுதிமொழியை அடுத்தே மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் யாழ். செயலகத்தை முற்றாக ஸ்தம்பி[illegible]டையச் செய்யும் வகையில் மறியல் போராட்டம் நடத்த உத்தேசித்துள்ளதாக நேற்றைய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலதிக அரசாங்க அதிபரிடம் தெரிவித்தனர்.

மாணவர் முத்திரைக்கான 50 லட்சம் ரூபா கடனையும், வறுமை நிவாரண உணவு முத்திரைக்கான 3கோடி ரூபா வருமதியையும் விரைவில் வழங்க வேண்டும் என்பதும் — மாற்று ஏற்பாடாக, தற்போதைய நெருக்கடி நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சுன்னாகம் இலங்கை வங்கிக்கு அருகில் அமைந்த வீடுகட்டக்கூடிய ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தா. சின்னத்துரை, ''லோகஸ்தான்'', பிரதான வீதி, சுன்னாகம்.

(6739)

## தென்னம் நாற்றுக்கள

உடன் நடுகைக்குகந்த நல்லரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வத்தாவி, கப்பல் இனங்கள் குறுகிய காலத்தில் பயன்தரக் கூடியவை விற்பனைக்குண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, மீசாலை,

(6852)

## மின்பிறப்பாக்கி தேவை

நல்ல நிலையிலுள்ள தூக்கிச் செல்லக்கூடிய 1kw வலுவுடைய மின்பிறப்பாக்கி Portable Generator) தேவை. விற்கவிரும்புபவர்கள் தயாரிப்பு, நிலை, வலு ஆகிய விவரங்களுடன் விலையையும் குறித்து தொடர்பு கொள்ளவும். செயலாளர், தொண்டமானாறுவெளிக்கள நிலையம், புத்தூர்.

(சி-6710)

## மணமகள தேவை

28 வயது, தொழில்நுட்பக் கல்லூரியில் படித்த, 4இல் செவ்வாயுள்ள கனடா மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. கொழும்பு வந்து விவாகம் செய்வார். தமையனும், சகோதரியின் கணவரும் பெ றியியலாளர்கள். தொடர்பு: இ. கனகசபாபதி விதானையார், 22, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.

(சி-6803)

## தேவை

வயது 31, திருவாதிரை, டென்மார்க்கில் தொழில் புரிபவருக்கும், வயது 27, திருவாதிரை, 7இல் செவ்வாய் உள்ள அவரின் சகோதரிக்கும் மணமக்கள் தேவை. முழு விவரங்களுடனும் கடிதமூலம் தொடர்புகொள்ளவும். இல. 578, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(28430)

## தவறிவிட்டது

மாரிமுத்து ஞானசேகரனின் 601890534X இலக்க அடையாள அட்டை கோண்டாவிலுக்கும், யாழ். பல்கலைக்கழகத்திற்கும் இடையில் 6-12-93 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அனுப்பி வைக்கவும். மா. ஞானசேகரன், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

(28435)

## O/L MATHS

G. C. E. (O/L)லில் சட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி.

(6853)

## தண்ணீர் கலந்த மண்எண்ணெய்!

தென்மராட்சி, டிச. 15

கூட்டுறவுச் சங்க கிளைகளில் கடந்த வாரம் வழங்கப்பட்ட மண்எண்ணெயில் தண்ணீர் கலக்கப்பட்டிருந்ததாக பச்சிலைப்பள்ளிப் பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

(ஓ-117)

## ஆலயங்களில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமான் கோயில் திருவிழா நாளை வியாழன் காலை 9-30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா 24ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் நடைபெறும்.

(க-161)

★ ★ ★

சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் கோயில் திருதியைதின விழா இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் இரவு 7 மணிக்கு சிறப்புரை நிகழ்த்துவார்.

(க)

## சங்கீத முதன்மை ஆசிரியர் சந்திப்பு

கல்விக் கோட்ட சங்கீத முதன்மை ஆசிரியர்களை இன்று புதன்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் தவறாது வருகை தரும்படி சங்கீத, உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(இ)

## நாளை

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா நாளை வியாழக்கிழமை மருதங்கேணியில் நடைபெறவுள்ளது.

(க-173)

## புகையிலை செய்கையில் ஆர்வம் இல்லை

வடமராட்சி பகுதியில் புகையிலைப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் இம் முறை ஆர்வம் காட்டவில்லை

கடந்த சில ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்பட்ட புகையிலை பதனிடப்பட்ட நிலையில் பெருமளவில் தேங்கிக் கிடப்பதாலும், இதனை சந்தைப் படுத்துவதில் பெரும் கஷ்டங்கள் இருந்து வருவதாலும் விவசாயிகள் புகையிலைப் பயிர்ச் செய்கையில் அக்கறை கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(க-173)

## நூல்களுக்குப் பரிசும் விருதும்

யாழ் இலக்கிய வட்டத்தின் இலக்கியப் பேரவை 1993 ஆம் ஆண்டில் வெளியான ஈழத்து நூல்களுக்குப் பரிசும், விருதும் வழங்கவுள்ளது. தெரிவுக்காக, படைப்பாளிகள் தமது நூலின் பிரதி ஒன்றை பேரவைக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்,

(க)


# யாழ்ப்பாண மாநகரசபை
# கேள்வி அறிவித்தல்
# 1994

## சந்தைகள் இறைச்சிக்கடைகள்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு **01—01—1994** முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் **24—12—1992** வெள்ளிக்கிழமை நண்பகல் **12-00** மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும், கேள்விப்படிவக் கட்டணம் ரூ. **100**/- உம் செலுத்துவதன் பேரில் **23—12—1993** வியாழக்கிழமை பிற்பகல் **3-00** மணிவரையும் யாழ்ப்பாண மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்படிவங்கள்.................................. சந்தை / கடைக்கான, கேள்வி என எழுதப்பட்ட கடித உறையிட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் **24—12—1993** ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் **12-0)** மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விவரங்களை யாழ்ப்பாண மநகரசபை நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம். தபாலில் அனுபப்படுமாயின் அதனால் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்க மாட்டாது.

கேள்விகள் **24—12—1993** பிற்பகல் **2-30** மணிக்கு திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாக இருக்கலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14-12-1993.

| குத்தகை விவரம் | குத்தகை காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடைகள் | | | | |
| கடை இல. 02 | 1 வருடம் | 2500.00 | 6000.00 | 112.50 |
| 2. குருநகர் மாட்டிறைச்சிக் கடைகள் | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 50000.00 | 195.00 |
| ,, 02 | 1 வருடம் | 2500.00 | 21000.00 | 195.00 |
| ,, 03 | 1 வருடம் | 2500.00 | 34500.00 | 195.00 |
| ,, 04 | 1 வருடம் | 2500.00 | 24000.00 | 195.00 |
| ஆட்டிறைச்சிக் கடை | | | | |
| 07 | 1 வருடம் | 2500 00 | 14000.00 | 195.00 |
| 3. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 7000.00 | 200.00 |
| ,, 02 | 1 வருடம் | 2500.00 | 6000'00 | 200.00 |
| ,, 03 | 1 வருடம் | 2500.00 | 5000.00 | 200.00 |
| ,, 07 | 1 வருடம் | 2500.00 | 5000.00 | 200.00 |
| ஆட்டிறைச்சிக் கடை | | | | |
| கடை இல. 08 | 1 வருடம் | 2500.00 | 5000.00 | 200.00 |
| ,, 09 | 1 வருடம் | 2500·00 | 5300.00 | 200.00 |
| கோழிக் கடை | | | | |
| கடை இல. 10 | 1 வருடம் | 2500.00 | 5000.00 | 200.00 |
| 4. பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | | | | |
| கடை இல. 03 | 1 வருடம் | 2500.00 | 24900.00 | 135.06 |
| அரியாலை மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500.00 | 16000.00 | 135.00 |
| புங்கங்குளம் ஆட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500.00 | 10000.00 | 200.00 |
| ,, மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500.00 | 19000.00 | 200.00 |
| **சந்தைகள்** | | | | |
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 1 வருடம் | 5000.00 | 75000.00 | |
| 2. குருநகர் சந்தை | 1 வருடம் | 5000.00 | 125000 00 | |
| 3. செங்குந்தா சந்தை | 1 வருடம் | 5000.00 | 200000.00 | |
| 4. நாவாந்துறை சந்தை | 1 வருடம் | 2500.00 | 40000.00 | |
| 5. பாசையூர் சந்தை | 1 வருடம் | 2500.00 | 30000.00 | |

(சி-6712)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## இராஜசூரியர் மனோன்மணி

திதி: துதியை **15 - 12 - 1993**

இல்லறத்தில் நல்லறமாய் ஈடில்லாப் பெருநிதியாய்
மங்களமாய் மனைவாழ்வு மாண்புடனே நிறைந்திருக்க
மன்னவன் போல் நாம் வாழ, மந்திரியாய்ப் பணிபுரிந்து
பஞ்சமிலா அன்போடு, பாசங்கள் படை சூழ
பந்தல் எனப் படர்ந்திருந்த பண்புருவே,
குல விளக்கே, குணக்குன்றே, தாயே, தயவான
மாமியே, அம்மம்மாவே, அப்பம்மாவே
மனதாற வில்லையம்மா, மனங்குளிர வில்லையம்மா
நின் ஆன்மா சாந்திபெற இறையடியை -
இறைஞ்சுகின்றோம்.

கணவன், மக்கள் குடும்பத்தினர்.

44/3, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி.

[28436]



# ROYAL INSTITUTE

(மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக)
மானிப்பாய்.

## SPOKEN - ENGLISH

BY:
**MR BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்:
**16 - 12 - 1993**
வியாழன் 2p.m.

(28429)



# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை-மானிப்பாய்
# 1994ஆம் ஆண்டு சந்தைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

மேற்படி கேள்விகளின் பொருட்டு, கீழ்க்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட விவரங்களின்படி கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி 1993-12-22ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12-00 மணி வரையும்.
(2) கேள்விகள் கிடைக்க வேண்டிய இறுதித்திகதி 1993-12-23ஆம் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12-00 மணி வரையும்.
(3) கேள்விகள் திறக்கப்படும் திகதி 1993-12-23ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2-00மணி.

அட்டவணை

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய்-பட்டினம்: | | | | | |
| 1. | கட்டுடைச் சந்தை | — | 300/- | 100/- | 500/- |
| மானிப்பாய்-கிராமம்: | | | | | |
| 1. | ஆட்டிறைச்சிக்கடை நவாலி பிரசாத்சந்தை | 250/- | 500/- | 100/- | 10,000/- |
| 2. | கருவாட்டுக்கடை சுதுமலை சாவற்கட்டுச் சந்தை | 100/- | 500/- | 100/- | 1,000/- |
| பண்டத்தரிப்பு-கிராமம்: | | | | | |
| 1. | ஆட்டிறைச்சிக்கடை மாசியப்பிட்டிச்சந்தை | 100/- | 500/- | 100/- | 10,500/- |

கா. சந்திரராசா,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்,
1993-12-08.

(சி-6709)



# SHAMROCK

யாழ். சுண்டுக்குளி

## A/L 94 DAY CLASSES

வர்த்தக பிரிவு ஆரம்பமாகியுள்ளது
எமது வழமையான ஆசிரியர்கள்.

(28439)



வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்

# 1994 ஆம் ஆண்டிற்கான
# கேள்வி அறிவித்தல்

பின்வரும் சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடைகள், இணுவில் வெளிக்கடைகளுக்கான 1994 ஆம் ஆண்டு குத்தகை கொடுப்பது சம்பந்தமாக 21-10-93 'உதயன்' பத்திரிகையில் வெளியான கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்விகள் மீண்டும் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரம் 22-12-93 நண்பகல் 12 மணி வரை வழங்கப்படும் 23-12-93 நண்பகல் 12 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் சகல கேள்விக்காரர்களையும் சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

உடுவில் உபஅலுவலகம்:-

1. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக் கடை
2. உடுவில் மல்வம் மாட்டிறைச்சிக் கடை
3. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை
4. இணுவில் சந்தை வெளிக்கடைகள்:-
   (1) கடை இல 1ம் கடை இல 2ம்
   (2) கடை இல 3
   (3) கடை இல 9
5. இணுவில் சந்தை

செல்வி தனுஜா தணிகாசலம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
13-12-93

(சி/2051)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
29
07
1939



உதிர்வு:
27
11
1992

## க. பேரம்பலம்

திதி: 15 - 12 - 1993

அன்போடும் பாசத்தோடும் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை ஆளாக்கி பெருவாழ்வு காணாமல் இறைவன் எம்மிடமிருந்து பிரித்தாலும், கனவிலும் நினைவிலும் எமது நெஞ்சங்களிலும் தங்கள் அன்பு என்றென்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

ஏழாலை மேற்கு,
தோட்டைக்காடு,
சுன்னாகம்.

(6741)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.


## ஆர்ப்பாட்டம் பயன் தருமா?

ஐ. நா. மனித உரிமை தினமான இம் மாதம் பத்தாம் திகதி, இலங்கை மனித உரிமை சங்கங்களின் ஒன்றியம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. பெண்களே அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டம் வடக்கு - கிழக்கு போருக்கு எதிரான ஒன்றாக மாறியதாக அறிவிக்கப்படுகிறது.

உயிர்களைக் கொல்லும் - காவு கொள்ளும் - இந்தப் போர் எங்களுக்கு வேண்டாம். போருக்கு போவதும் எங்கள் பிள்ளைகள்; போரில் மடிவதும் எங்கள் பிள்ளைகள். விடுதலைப் புலிகளும் மனிதர்கள் தான். மனிதர்கள் மனிதரைக் கொல்வதில் அர்த்தமில்லை அதனால் நாம் இந்தப் போரைக் கண்டிக்கிறோம் — என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் கோஷமிட்டிருக்கின்றனர்.

தென்னிலங்கையில் போருக்கு எதிரான குரல் வெளிப்படையாக ஒலித்தது புதினம் தான். புதிய, சிறிய மாற்றம் தான். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்திருக்கலாம். அவர்கள் மனித உரிமைச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் போரை எதிர்த்துக் கோஷமிட்டிருக்கலாம். எனினும் போர் வேண்டாம் என்று வெளியே சொல்லுமளவுக்கு சிங்களத் தாய்மார்களிடம் துணிச்சல் வந்திருக்கிறது!

வடக்கு - கிழக்கில் அரசாங்கம் நடத்தி வரும் யுத்தம் அர்த்தமற்றது, வீணானது என்று சிங்களப் பொதுமக்கள் தரப்பிலிருந்து குரல் எழுந்திருப்பதை, அதுவும் தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்று அரசு வரிந்து கொண்டிருக்கும் வேளையில் எழுந்திருப்பதை முற்றாகப் பொருட்படுத்தாமல் புறக்கணிக்க முடியாது.

இந்தக் குரல் பருவ கால கோஷமாக அல்லது வருடத்தில் ஒரு நாள் ஒலிக்கும் கோஷமாக இருந்தால் அதனால் பயன் ஏற்படப் போவதில்லை. போருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தெற்கில் அடிக்கடி நடத்தப்படும் நிலைமை உருவாகவேண்டும். தெற்கின் அரசியல் தலைவர்கள் சிங்கள மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்கிறார்கள் என்ற கருத்து வெளிப்படையாகவே பரப்பப்பட வேண்டும்.

இனப்பிரச்சினை இந்தளவு பூதாகாரமாகி பல வகைகளாலும் பெரும் அழிவு நிலைக்கு வந்திருப்பதற்குச் சிங்கள அரசியல் தலைவர்களே காரணம். தேர்தல் காலம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் தாம் நினைத்த மாதிரியே அவர்கள் நடந்து வந்தார்கள். சிங்கள மக்களை உணர்ச்சி நிலைக்கு உட்படுத்தி தமது தவறான பாதையில் இட்டுச் சென்றார்கள்; செல்கிறார்கள்.

அதனால் யுத்தத்திற்கு எதிரான கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் பரப்புவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. எனினும் இது விடயத்தில் துணிச்சலுடன் முயன்றால் நிலைமையை மாற்றலாம். அதற்குப் பரந்த, புதிய நோக்கும், சிந்தனையும் ஆளுமையுள்ள சமூகத் தலைவர்கள் அங்கு தேவை. அத்தகையோரை இனங்கண்டு செயலில் ஈடுபடுத்துவது யார்? என்ற பெரிய கேள்வி தவிர்க்க முடியாதது.

தமிழர்கள் தங்கள் வாழ்வுரிமைக்காகப் போராடுகிறார்கள். அவர்கள் தங்களைத் தாமே ஆளவேண்டும்; தமக்கென ஓர் அரசை நிறுவ வேண்டும் என்று விரும்புகிறார்கள். அது அவர்களிடம் இருந்து பிரிக்க முடியாத உரிமை. அதனைச் சிங்களவர்கள் கொடுப்பது என்பதல்ல. எனவே தமிழர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவது நியாயமானது. அதற்கு எதிராக அரசு போர் நடத்துவது அநியாயமும், அதர்மமுமானது.

இதனை விளங்கிக் கொள்ளும் பக்குவம் சிங்கள மக்களுக்கு வந்தால் தான் ஆர்ப்பாட்டங்களால் தலைவர்களை திருத்த முடியும். இல்லையேல் ஆர்ப்பாட்டங்கள் வெறும் பெயரளவு நிகழ்வுகளாகவே முடியும்.

## தென்மராட்சி கெற்பலியில் மாவீரர் சோலைவனம்

இதுவரை காலமும் மண் மீட்புப் போரிலே வீரச்சாவினை தழுவிக் கொண்ட மாவீரர்களது நினைவாக மாவீரர் சோலைவனம் ஒன்று கடந்த 24 ஆம் திகதி கெற்பலியில் திறந்து வைக்கப்பட்டது. யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் திரு. பரணி தேசியக் கொடியை ஏற்றி வைக்க, தென்மராட்சிக் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாவீரர் சோலை வனத்துக்கான பெயர்ப்பலகையை யாழ். மாவட்டத் தளபதி திரை நீக்கம் செய்து வைத்தார்.

கெற்பலியில் சுமார் 30 ஏக்கர் காணி இந்த மாவீரர் சோலை வனத்துக்கு சேர்க்கப்பட்டிருப்பினும் இம்முறை மாவீரர் வாரத்தில் மட்டும் 10 ஏக்கர் விஸ்தீரமான காணியில் பலஇன மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இந்த சோலை வனப் பராமரிப்பினை யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தொடர்ந்து மேற்கொள்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## தேவாலயம் மீதான குண்டுவீச்சு குறித்து கவலை

யாழ்ப்பாணம், டிச. 15

கத்தோலிக்க தேவாலயங்கள் மீதும் பொதுமக்கள் மீதும் அண்மையில் நடைபெற்ற கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சை ஒட்டி ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நிறைவேற்றியுள்ளது.

குண்டு வீச்சின் போது இறந்த குடும்பத்தினருக்கு வழங்கவென 5,000 ரூபா பணத்தை சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா யாழ். ஆயரிடம் வழங்கவுள்ளார். (க)

## மாவீரரின் ஈகைச் சுடர் ஒளியில் தாயக விடிவினைக் காண்கிறோம்

### நவிண்டில் ஒளியேற்று நிகழ்வில் பேச்சு

வல்வெட்டித்துறை, டிச. 15

மாவீரர்களின் ஈகைக்சுடர் ஒளியில் எமது தாயக விடிவினைக் காண்கிறோம். மாவீரர்கள் தமது வீரத்தின் மொத்தச் சுடரொளியினையும் எமது தாயக மீட்புக்காக ஈந்து விட்டே வீரச்சுடர்களாக மரணிக்கின்றனர்.

— இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் பெண்கள் புனர்வாழ்வுப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி சுடரவள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நவிண்டில் கலைமதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற பூநகரியில் வீரச்சாவடைந்த 458மாவீரர்களின் ஈகைச்சுடர் ஒளியேற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது —

விடுதலைப் புலிகள் களம் பல கண்டவர்கள். ஆனால் பூநகரி தாக்குதல் வித்தியாசமானது. பூநகரிச் சமர் சர்வதேசத்தையும் பிரமிக்க வைத்துள்ளது.

எமது பலம் முழுவதையும் இத்தாக்குதலில் பயன்படுத்தியுள்ளோம். இதன் மூலம் நாம் இமாலயச் சாதனையைப் படைத்துள்ளோம் — என்றார். (ஒ-155)

## மந்திகை வைத்தியசாலையில் 'பண்டேஜ்' துணி இல்லாது நோயாளர்கள் அவதி

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் காயங்களுக்கு மருந்து கட்டுவதற்கான ''பண்டேஜ்'' துணிகள் இன்மையால் நோயாளர்கள் பெரிதும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

பண்டேஜ் துணிகள் இன்மையால், பிரஞ்சு வைத்தியக் குழு வார்ட்டுகளில் சிகிச்சை பெற்று வரும் காயக்காரர்களுக்கு மருந்துகட்டுவதற்கென மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பண்டேஜ் துணிகளை வழங்கி வருகிறது.

இதேசமயம் வெளி நோயாளர் பிரிவில் மருந்து கட்டுவதற்குத் தேவையான துணிகளைக் கொண்டு வருமாறு கேட்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-173)

## கப்பலில் கடிதம் அனுப்ப ஒழுங்கு

யாழ்ப்பாணம், டிச. 15

தற்போது காங்கேசன் துறையில் நங்கூரமிட்டிருக்கும் 'வாதுவ' கப்பலில் கடிதங்களை அனுப்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும்—

கடிதங்களை 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அஞ்சலகங்களிலோ, அஞ்சல் பெட்டிகளிலோ சேர்க்குமாறும்—

யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அதிபர் வேண்டுகின்றார். (க)

## தொழில்நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், டிச. 15

தேசிய தொழில்நுட்ப டிப்புளோமா பயிற்சி நெறிக்கான பரீட்சை கொழும்பில் நடைபெற்றதாகவும்—

அப்பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 22 பரீட்சார்த்திகள் தோற்றினர் என்றும் —

யாழ். அரச அதிபர் யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளார். (இ-3)

## மண் அரிப்பினைத் தடுக்க முயற்சி

தரிசாகக் கிடக்கும் மணற்காட்டு மணல் வெளிப்பகுதியினை சோலை வனமாக மாற்றுவதன் மூலம் மண் அரிப்பினை தடுக்கும் நோக்குடன் கன்றுகளை நடுகை செய்யும் முயற்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பகுதி முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக கடற்புலிகளின் சிறப்புத் தளபதியின் நிதியூட்டத்துடன் சுமார் 10 ஏக்கர் விஸ்திரணமான மணற்பாங்கான பிரதேசத்திலேதென்னங்கன்றுகளும், 10 ஏக்கர் நிலத்தில் மரமுந்திரிகைகளும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் கடற்புலிகளின் சிறப்புத் தளபதியின் நிதியூட்டத்துடன் 20 ஏக்கரிலும் வடமராட்சிதெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க கொத்தணியின் நிதியூட்டத்துடன் 15 ஏக்கருப் உட்பட 35 ஏக்கர் நிலப்பரப்பில் 6 அடிக்கு ஒரு கன்று என்ற அடிப்படையில் சவுக்கம் கன்றுகளும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடமும் இந்தப் பகுதியில் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் முன்னோடித் திட்டமாக சவுக்கம் கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வெற்றியளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்டபேரீச்சம் கன்றுகளும் மணற்பாங்கான இந்தப் பகுதியிலே பரீட்சார்த்தமாக இம்முறை நடுகை செய்யப்பட்டுள்ளன.

## இரு அரச எம். பிக்கள் மீது விரைவில் நடவடிக்கை

### ஐ. தே. க. தலைமைப்பீடம் முடிவு

அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றில் குற்றவாளியாக உயர் நீதிமன்றத்தினால் காணப்பட்ட இரண்டு அரச எம்.பிக்கள் மீதும் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடம் தீர்மானித்துள்ளது.

ராஜாங்க அமைச்சர் எச். ஜி. பி. நெல்சன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. எஸ். சூரியாராச்சி, மாகாண சபை உறுப்பினர் கீர்த்திரத்தின ஆகியோரே ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக இருப்பவர்கள் ஆவர். (ஒ-எ)

## பரீட்சை நடைபெறாது

யாழ்ப்பாணம், டிச. 15

இன்று 15 ஆம் திகதி நடைபெறவிருந்த ஆண்டு 9க்கான கனிஷ்ட தொழில்நுட்பப் பத்திரத்துக்கான பரீட்சை நடைபெறாது என்றும், வேறொரு திகதியில் பரீட்சை நடைபெறும் என்றும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (த)

## மீன்பிடி தடைச் சட்டம் நீக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 15

அரசாங்கத்தினால் போடப்பட்டுள்ள மீன்பிடி தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் அல்லது ஒரு குறிப்பிட்ட கடல் வலய எல்லைக்குள் மீன் பிடிக்க மீனவர்களை அனுமதிக் வேண்டும்.

இவ்வாறு அரசாங்கத்தை கோருவது என புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மாவட்ட கடல் தொழில் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் கூட்டம் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு மீனவர்களின் நன்மை கருதி எடுக்கப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு: -

★ மீன் பிடித் தடைச் சட்டத்தை நீக்க அரசு இணங்காவிட்டால் மீன் பிடித் தொழிலோடு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

★ தற்போது மூடப்படும் நிலையில் உள்ள மீன்பிடிபயிற்சிப் பாடசாலையை மூடாது அது தொடர்ந்து இயங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இத்தீர்மானங்களை கொழும்பில் தற்போது உள்ள யாழ். அரச அதிபர் ஊடாக அரசாங்கத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை தலைவராக கொண்டு இயங்கவுள்ள இக்குழுவின் செயலாளராக மாவட்ட கடல் தொழில் அபிவிருத்தி உதவி ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட பிரதி ஆணையாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் போன்றோரும் இதில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இக்குழுவின் கூட்டம் மாதம் தோறும் கடைசிச் செவ்வாய்க்கிழமையில் காலை யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (இ-162)

## வாழைப்பழம் 1 கிலோ 8 ரூபா

யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருகிறது.

திருநெல்வேலி, கல்வியங்காடு, சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளில் ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 8 ரூபாவாக விற்பனையாகின்றன.

## கலை ஊடக இணைய அலுவலகம் இன்று திறப்பு

வீடியோ, படப்பிடிப்பாளர்கள், வீடியோ நாடா விநியோகஸ்தர்கள், ஓடியோ நாடா விநியோகஸ்தர்கள் ஆகியோரைஒன்றிணைத்து ''கலை ஊடக இணையம்'' என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

இந்த இணையத்திற்காக அலுவலகம் ஒன்றும் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி — ஐந்து சந்தியில் — திறந்து வைக்கப்படும்.

இதேவேளை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அங்கத்தவர்கள் அனைவரும் இந்த அலுவலகத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# வீழ்ச்சியுற்ற சோவியத் சாம்ராஜ்யம் மீண்டும் கட்டி எழுப்பப்படுமா?

பிரிந்து போன முன்னாள் சோவியத் குடியரசு நாடுகளையும் சேர்த்து ரஷ்ய சாம்ராஜ்யத்தை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் என்று வற்புறுத்தி வரும் லிபரல் ஜனநாயகக்கட்சி ரஷ்ய நாடாளுமன்றத்துக்கு கடந்த ஞாயிறு நடந்த பொதுத் தேர்தலில் கூடுதல் ஆசனங்களைப்பெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின்படி—

ஜனாதிபதி யெல்ட்சினுக்கு எதிரான தீவிரப்போக்குடைய லிபரல் ஜனநாயக் கட்சிக்கு 25 சதவீதமான வாக்குகள் கிடைத்துள்ளன. யெல்ட்சினுக்கு ஆதரவான கட்சிகளுக்கு 15 சதவீத வாக்குகளே கிடைத்தன.

யெல்ட்சினுக்கு எதிரான இன்னொரு சட்சியான கம்யூனிஸ்ட்களுக்கு 11சதவீத வாக்குகள் கிடைத்தன.

முன்னாள் ஜனாதிபதி கோர்பச்சேவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, சோவியத் யூனியனில் இணைந்து இருந்த குடியரசுகள் தம்மை இறைமையுள்ள தனிநாடுகளாக சுதந்திரப் பிரகடனம் செய்தமை தெரிந்ததே.

ரஷ்ய நாடாளுமன்றத்தில் பிரிந்து சென்ற குடியரசுகளை மீண்டும் சேர்த்து ரஷ்ய சாம்ராஜ்யத்தை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தும் லிபரல் ஜனநாயக் கட்சி பெரும்பான்மையைப் பெறுவது குறித்து, பிரிந்து சென்று சுதந்திரமாக செயற்பட்டு வரும் நாடுகள் மத்தியில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய அச்சுறுத்தலைச் சமாளிக்க பிரிந்து சென்ற பால்டிக் நாடுகள் மேற்கு நாடுகளுடன் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எஸ்தோனிய, லத்விய, லித்துவேனிய நாடுகளின் ஜனாதிபதிகள் கூறியுள்ளனர்.

### நாடாளுமன்ற தேர்தலின் எதிரொலி

இவர்கள் இன்று புதன் கூடி புதிய நிலைமை குறித்து ஆராயவுள்ளனர்.

தன்னிடமுள்ள அணு ஆயுதங்களைக் குறைப்பது என்று ஏற்கனவே எடுத்த முடிவை மீண்டும் பரிசீலனை செய்யப் போவதாக உக்ரைன் நாடு அறிவித்துள்ளது.

முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்ற குடியரசுகளில் உக்ரைன் நாடே அணு ஆயுதங்களை ஏராளமாக வைத்திருக்கிறது அத்துடன் ரஷ்யாவின் அச்சுறுத்தலை சமாளிக்கக் கூடிய இராணுவ மற்றும் கடற்படை வலிமையும் உக்ரைன் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பொதுத் தேர்தலுடன்— புதிய அரசமைப்புக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான சர்வசன வாக்கெடுப்பு கடந்த ஞாயிறு ரஷ்யாவில் இடம்பெற்றது.

ஜனாதிபதி யெல்ட்சினுக்கு பூரண நிறைவேற்று அதிகாரங்களை வழங்குவதான அந்த அரசமைப்புக்கு, வாக்காளர்களில் 60 சதவீதமானோர் வாக்களித்தனர்.

பூரண அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாக யெல்ட்சின் இதன் மூலம் விளங்கினாலும், தனது தீர்மானங்களை நாடாளுமன்ற அங்கீகாரம் பெற்று அமுல் நடத்த முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது நேரடியான ஆணைகள் மூலமே அவர் நாட்டை நிர்வகிக்கக்கூடிய நிர்ப்பந்தத்தை புதிய நாடாளுமன்றம் ஏற்படுத்தும் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

ரஷ்யாவின் புதிய நாடாளுமன்றம் கூடும்போது, லிபரல் ஜனநாயக் கட்சியினரை ஒதுக்கி நாட்டை நிர்வகிக்க முடியாத நிலை யெல்ட்சினுக்கு ஏற்படும் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது.

நாடாளுமன்றத்தை புறக்கணித்து செயற்படும் நிலை ஏற்படுமானால், யெல்ட்சின் ரஷ்யாவின் 'ஹிட்லர்'ராக மாறும் ஆபத்து உண்டு என்று ரஷ்ய அவதானிகள் கருதுவதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

இதேவேளை—

ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தல் முடிவு குறித்து ஜேர்மன் அரசு ஏமாற்றம் தெரிவித்துள்ளது.

தேர்தல் முடிவு ஆச்சரியத்தைத் தரவில்லை என்று கூறிய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன், ஆட்சி மாற்ற நெருக்கடியில் உள்ள ரஷ்ய மக்கள் இத்தேர்தலில் தங்கள் எதிர்ப்புணர்வைக் காட்டியுள்ளனர் என்று தெரிவித்தார். (ஒ-எ)

## எழுதுவினைஞர் நியமனத்தை விரைவாக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 15

மத்திய அரசாங்க சேவையில் எழுதுவினைஞர் பதவி நியமனத்துக்கு யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை நடந்தபோதும், அவர்களுக்கு இன்னும் நியமனம் கிடைக்கவில்லை எனவும் —

அதேவேளை கொழும்பிலும், மாகாண சபைப் பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றவர்களுக்கு நியமனம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது எனவும் —

சுட்டிக்காட்டும் மகஜர் ஒன்று சம்பந்தப்பட்டவர்களால் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தாம் நீண்ட காலம் ஆவலுடன் நியமனத்துக்கு காத்திருப்பதாகவும், தமக்குக் கூடிய விரைவில் நியமனம் வழங்க ஒழுங்குகள் செய்யும்படியும் அவர்கள் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

## தேக்கம் கிழங்கு விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 15

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியின் ஆலோசனையுடன் யாழ் அரசாங்க அதிபரின் ஏற்பாட்டினால், யாழ். வன இலாகாவினரால் தென்பகுதியில் இருந்து தேக்கம் கிழங்குகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இம்மழைக் காலத்துக்குள் விரைவுபடுத்தி இக்கிழங்குகளை நட்டுவிட வேண்டியுள்ளதால் இதனைப் பெற விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினரிடமும், யாழ். மாவட்ட, கோட்ட அலுவலகங்களிலும் மற்றும் கடற்புலிகள் மாவட்ட அலுவலகத்திலும் யாழ். வன இலாகாத் திணைக்களத்திலும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

விநியோகிக்கப்படும் தேக்கம் கிழங்குகள் உரியமுறையில் நடுகை செய்யப்பட்டு பாரமரிக்கப்படுவதனை கண்காணிக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அந் நிறுவனத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## 'தூர்க்கா' வெளியீடு

யாழ்ப்பாணம், டிச. 15

வண்ணைக் கவிஞனின் 'தூர்க்கா' சஞ்சிகை வெளியீடு கடந்த 8 ஆம் திகதி திரு. பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் திரு. கனக சபாபதி நாகேஸ்வரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

அரியாலையூர் கலை ஒலி நாடக மன்றத்தினரின் 'சத்தியவான் சாவித்திரி' புராண நாடகமும் இந்த நிகழ்வில் இடம்பெற்றது. (க)

## பொதுசன நூலகம்

யாழ்ப்பாணம், டிச. 15

[illegible] கோப்பாய் [illegible] அலுவலகத்தில் [illegible] அண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது. (க)

## சமரசப் படுத்தச் சென்றவர் குடையால் தாக்குண்டுகாயம்

### அடித்தவருக்கு ரூ 500 தண்டம்

சமாதானம் செய்யச் சென்றவரை குடையால் அடித்துக் காயப்படுத்தியவருக்கு 500 ரூபா தண்டம் செலுத்துமாறும், தவறின் ஒரு மாதகால கட்டாய சமூக சேவை செய்யுமாறும் யாழ். மாவட்ட தமிழீழ நீதிமன்றில் தீர்ப்பளிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி தெரிவிக்கப்பட்டதாவது —

இணுவில் கிழக்கு வங்கியடியைச் சேர்ந்த 58 வயதான செல்லையா பத்மநாதன் என்பவர் உரும்பராய் ஞானவைரவர் கோயிலடியில் இருந்து இணுவில் நோக்கி வீதியால் சென்று கொண்டிருந்த போது உரும்பராய்ச் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாக 20 யார் தூரத்தில் மருதனார்மடம் வீதியில் ஆறு சைக்கிள்கள் வந்து கொண்டிருந்தன.

திடீரென அவற்றில் 2 சைக்கிள்கள் கீழே விழுந்து விட்டன. அப்போது விழுந்தவர்களில் ஒருவரான உரும்பராய் மேற்கு சிவகுல வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சர்வேஸ்வரன் என்பவர் எழுந்து அவருடன் விழுந்த மற்றவருக்கு அடித்தார்.

அப்போது சண்டையிட வேண்டாம் எனக்கூறிய செ. பத்மநாதனை நீ யார் என்னைக் கேட்பதற்கு என்று கூறி சி. சர்வேஸ்வரன் குடையின் பின்பக்கத்தால் காதுக் கருகில் குத்தி காயப்படுத்தியுள்ளார்.

சென்ற மாதம் 30ஆம் திகதி மேற்படி மன்றில் நடைபெற்ற இவ்வழக்கில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட சி. சர்வேஸ்வரன் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் தமிழீழ சட்டக் கோவை பிரிவு 11 அ 10 இன் கீழ் இவ்வாறு தீர்ப்பளிக்கப் பட்டது. (ஒ-162)

## கொரிய யுத்தத்தில் காணாமற்போன அமெரிக்கப் படையினரின் எலும்புகூடுகள் ஒப்படைப்பு

லண்டன், டிச. 15

கொரிய யுத்தத்தின் போது காணாமற் போன அமெரிக்க மற்றும் நேச படைகளைச் சேர்ந்த 33 படையினரின் எலும்புக் கூடுகள் நேற்று ஐ. நா. அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

அடையாளம் காணப்படுவதற்காக அவை ஹவாய் தீவுக்கு இராணுவ விமானத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. அப்போது இராணுவ மரியாதை வழங்கப்பட்டது.

காணாமற் போன அமெரிக்கப் படையினரின் எலும்புக் கூடுகளை வட கொரிய அரசு அதிகாரிகள் ஒப்படைப்பது இம்மாதத்தில் இது மூன்றாவது தடவையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

**நிலம் அரித்து நீர் மூடும்-மூடாது நல மறிந்து மரம் நடுமிடத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா இரத்தினம்

மூளாயைச் சேர்ந்த திருமதி நடராசா இரத்தினம் 13-12-93 இல் காலமானார்.

இவர் காலஞ் சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற திருமதி ரதிதேவி, தவபாலன் (J.C. என்ரபிறைஸ், கொழும்பு), இராஞ்சினிதேவி, குணபாலன் (ஜேர்மனி), இரங்காதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சி.க. பாலசிங்கம் (கிராம சேவையாளர் ஈச்சமோட்டை) உமாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆதித்தன், அருணன், ஆதவன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 16-12-93 (வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு பித்தளை மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. தவபாலன்

கரம்பவளவு,
மூளாய் கிழக்கு. (28440)

## வீரகத்தி சின்னப்பு

(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஓவசியர்)

வீரகத்தி சின்னப்பு அவர்கள் காலமானார். இவர் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி ஜனதா, (இசை ஆசிரியை கொழும்பு), திருமதி வனிதா (இத்தாலி), சிவநேசன் (கனடா), விக்னேஸ்வரன் (வீரகேசரி நிறுவனம்), ஸ்ரீரங்கநேசன், பிருந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஐ. பராபரன் (மக்கள் வங்கி கொழும்பு), இ. ரங்கநாதன் (இத்தாலி), கலாவதி (கனடா) ஆகியோரின் மாமனாரும், மோகனப்பிரியா, தாரகா, பானுமதி, கிருஷ்ணமேனன் ஆகியோரின் அன்புத் தாத்தாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மஞ்சந் தோட்டம் கரவெட்டி மேற்கு இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகனக் கிரியைகள் பற்றிய நேர விபரம் பின்பு அறிவிக்கப்படும்.

தகவல்:
A. K. கருணாகரன் (மைத்துனர்)
இசை ஆசிரியர் (சிங்கப்பூர்)

மஞ்சந் தோட்டம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. (28433)

## கனகர் செல்லத்துரை

கொக்குவில் கிழக்கு நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு கேணியடியில் வசித்தவருமாகிய கனகர் செல்லத்துரை 14-12-93 இல் காலமாகி விட்டார்.

இவர் சுகிர்தரட்ணத்தின் அன்புக் கணவரும், ஜெயபாலன் (ஜேர்மனி), ஜெயரஞ்சிதமலர், ஜெயராணி, ஜெயரூபி (ஜேர்மனி), ஜெயமாலினி, ஜெயசீலன் (ஜேர்மனி), ஜெயகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.12.93) முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
செ. ஜெயகாந்தன் (மகன்)

அருளானந்தம்
(மோட்டர் மெக்கானிக்)
புதுறோட்,
கொக்குவில் மேற்கு. (28442)

## கோபிநாத்சிங் சற்குணநாயகி

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கோபிநாத்சிங் சற்குணநாயகி 14 - 12 - 93 அன்று காலமானார்.

அன்னார் உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்ட பொ. கோபிநாத்சிங் (சுவிஸ்) அவர்களின் அன்பு மனைவியும், கோகுலன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), இராகுலன் (உரும்பராய் இந்துக் கல்லூரி), திலகாயினி (அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பூமலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், உரும்பராய் தெற்கு சி. த. பொன்னுத்துரை பரமேஸ்வரி, காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், இரத்தினம்மா, குணநாயகம், செல்வநாயகி, சண்முகவடிவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிதம்பரநாதன் (ஆயுள்வேத வைத்தியர்), கமலாதேவி, சந்திரசேகரம் குகநேசமலர் (ஆசிரியை உரும்பராய் இந்துக் கல்லூரி), சற்குணநாதன் (சிமெந்து கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), சரச்சந்திரன் (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்), அனுராதா, விவேகினி, செந்தூர்ச்செல்வா, அனித்தா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள், அராலி மேற்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 15 - 12 - 93 காலை 11.00 மணிக்கு அராலி வேலங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
குடும்பத்தினர்

அராலி, மேற்கு,
வட்டுக்கோட்டை. (28443)

## தங்கம்மா கிருஷ்ணபிள்ளை

அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்தியர் கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவி தங்கம்மா கிருஷ்ணபிள்ளை 14 12-1993 இல் காலமானார். அன்னார் அபூர்வம், சந்தனம்மா, மகாலிங்கம் (கிராமசேவை அலுவலர், கொட்டடி, நாவாந்துறை), நவமணி, கமலாதேவி, மங்களதேவி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 2 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி மகாலிங்கம் (மகன்)
கிராமசேவை அலுவலர்
(கொட்டடி, நாவாந்துறை)

6, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (28445)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

# நீர்வளங்களை இனங்காணும் ஆய்வரங்கு கிளிநொச்சியில்

## இன்றும் நாளையும் நடக்கும்

யாழ்ப்பாணம், டிச. 15

மீளக் குடியமர்விற்கான நீர் வளங்களை இனங் காணுதல் தொடர்பான ஆய்வரங்கு இன்றும் நாளையும் கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்த ஆய்வரங்கு காலை 8-00 மணி முதல் மாலை 5-15 மணி வரை நடத்தப்படவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உக்கட்டுமானப் பகுதியினர் நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம், போரூட் நிறுவனம் ஆகியவற்றை இணைத்து இந்த ஆய்வரங்கினை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

முதல் நாளான இன்று காலை அமர்வு, யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையிலும் —

மாலை அமர்வு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க. பொன்னம்பலம் தலைமையிலும் நடைபெறவுள்ளன.

இன்றைய தினம்

''வடமாகாணத்தில் விவசாய உற்பத்தி அபிவிருத்தியில் பாரிய நீர்ப்பாசனக்குளங்களின் முக்கியத்துவம்''

''வடமாகாணத்தில் விவசாய உற்பத்தி அபிவிருத்தியில் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் முக்கியத்துவம்''

''வடமாகாணத்தில் ஆற்றுப் படுக்கைகளும் அவற்றிலுள்ள நீரின் தற்போதைய பயன்பாடும்''

''அமுலாக்க நெறிமுறைகளும் புனருத்தாரணத்துக்கான குளங்களும்''

ஆகிய விடயங்களின் கீழ் ஆய்வுரைகள் இடம்பெறவுள்ளன.

நாளை இரண்டாம் நாள் காலை அமர்விற்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. இ. தர்மகுலசிங்கமும் மாலை அமர்விற்கு மன்னார் அரசாங்க அதிபர் திரு. க. கணேஸ்ம் தலைமைவகிப்பர்.

நளைய தினம்

''நீர்வளம் பராமரித்தல்''

''வடமாகாணத்தில் நீர் முகாமைத்துவம்''

ஆகிய விடயங்களின் கீழ் ஆய்வுரைகளும் நடைபெறவுள்ளன.

மாலை அமர்விலே ஆய்வரங்கு தொடர்பான கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது. (இ)

### போரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்க வேண்டும். — என்று எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசைக் கேட்டுள்ளார்.

தீர்வுத் திட்டம் ஒன்று உடனடியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள அவர் இந்தப் பிரச்சினை குறித்து இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் அரசு எடுக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தப் போரினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

இந்தப் போரை அரசு பயங்கரவாதப் பிரச்சினையாகக் காட்டுகிறது. இது பயங்கரவாதப் பிரச்சினை அல்ல என்பதை நாம் தெளிவு படுத்துகிறோம். எனவே அரசே இந்தப் பிரச்சினையைத் தீர்த்தும் வைக்க வேண்டும். — என்றார் அவர்.

இதேவேளை —

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணக்கூடிய தீர்வுத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். — என்று அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் வண. சந்தானந்த தேரர் அரசாங்கம் உட்பட நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

பிரச்சினைக்குத் தீர்வு காணச் சமர்ப்பிக்கப்படும் தீர்வுத் திட்டங்கள் தெளிவானவையாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-5)

### ப நோ, கூ ச

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கக் கூடியதாக செயலகத்தின் வசம் உள்ள உணவுப் பொருள்களைத் தர வேண்டும் என்பதும் — ப. நோ கூட்டுறவுச் சங்கங்களின் கோரிக்கைகளாகும்.

நேற்றைய மறியல் போராட்டத்தில் சுமார் நூறு பேர் கலந்து கொண்டனர். அவர்கள் சுலோக அட்டைகளை வைத்திருந்தனர்.

★ தென்னிலங்கை மாணவருக்கு உல்லாசத்துக்கு பண ஒதுக்கீடு, எமது மாணவருக்கு முத்திரைக்கும் பண ஒதுக்கீடு இல்லையா?

★ கூட்டுறவுச் சங்க நிதியிலா சிறீலங்கா அரசின் ஆயுதக் கொள்வனவு?

★ பாவனையாளர் பட்டினி செயலகத்தில் நாலு கோடி.

★ மக்கள் பணத்தை மக்கள் சேவை, செய்யத் திருப்பிக் கொடு —

இப்படியான சுலோகங்களை அவர்கள் வைத்திருந்தனர்.

இது தொடர்பாக மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்ததாவது:-

உணவு முத்திரைக்கான கொடுப்பனவுகள் கல்வி அமைச்சின் கீழ் வருவன. ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்கள் சமர்ப்பித்த விபரங்கள் தற்போது கொழும்பில் உள்ள யாழ். அரசாங்க அதிபரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் யாழ். வரும் போது நல்ல முடிவுகளுடன் வருவார் என நம்புகிறோம்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கூட்டுறவு உதவி ஆணையாளர் தேசியக் கூட்டுறவுச் சபைத் தலைவர் மற்றும் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தி முடிவு அறியப்படும் — என்றார்.

(அ-162-111-5-17)

## ஒரு நாள் நீடிப்பு

வடமராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பூநகரி முகாம் தகர்ப்பு மாதிரி வடிவமைப்பு கண்காட்சி பார்வையாளர்களின் வசதி கருதி நேற்றும் நடைபெற்றது.

11 ஆம், 12 ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த இந்த கண்காட்சியை காண இரவு பகலாக பல்லாயிரக் கணக்கானோர் திரண்டிருந்தனர்.

இதனை அடுத்தே நேற்று வரை கண்காட்சி நீடிக்கப்பட்டது. (இ-173)

## படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

பூநகரித் தாக்குதலிலும், யாழ்தேவி இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபட்ட சில இராணுவ அதிகாரிகளுக்கு ஸ்ரீலங்கா அரசினால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாம்.

இந்த தாக்குதல்களில் திறமையாக செயல்பட்டமைக்காக கேணல் சாந்த கொட்டேகொட, கேணல் சரத் பொன்சேகா ஆகிய இருவரும் பிரிகேடியர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் ஒரு முஸ்லிம் உட்பட 10 லெப்ரினன்ட் கேணல்கள் - கேணல்களாகவும், 18 மேஜர்கள் - லெப்ரினன்ட் கேணல்களாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (இ-9)

"GREEN FOCUS"
REGIONAL ENVIRONMENT PROGRAMME

To team up in Planning and Implementing 'Projects', as a component of Global Programme, incorporating 'Agenda 21' of UNCED (Earth Summit '92) with the assistance of GEF - World Bank, we are soliciting applications for nominating as 'Area Focal Points' in the environmental continent of Shri Lanka in the Region of South - East Asia.

Applications are entertained from competent professionals with relevant advanced University degrees and / or from relevant and competent NGOS.

Local applications close on 30 December 1993, and are received by Ordinary post at C/o. P. O. Box: 381, Colombo.

DR. NAGULES KATHIRGAMANATHAN
REGIONAL FOCAL POINT
(SOUTH - EAST ASIA)
EARTH COUNCIL

10 December 1993
EC/SEA/N/93 (C-6708)

### ம காண..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது கணவரை விடுவிக்க இலஞ்சம் கேட்டதாகவும் அவர் தனது சத்தியக் கடதாசியில் தெரிவித்துள்ளார்.

இலஞ்சம் கேட்ட நபருடன் பொலீஸாரும் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-6)

### குடா நாட்டுக்கு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கிறார்கள்.

உணவு மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதுபோல — அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான தபாற் சேவையை ஆகக் குறைந்தது மாதத்தில் ஒரு தடவையாவது ஒழுங்காக செய்வதற்கு வழி செய்யப்படமாட்டாதா? — என்று மக்கள் பலரும் ஆத்திரத்துடன் கேட்கிறார்கள்.

இந்த கேள்விகளுக்கு மத்தியில் —

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குரிய தபால்களைக் கொண்ட 1,200க்கும் அதிகமான பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக கவலைக்குரிய தகவல் உதயனுக்குக் கிடைத்துள்ளது.

இரண்டு மாதங்களாக தபாற் பொதிகள் வந்து சேராமை குறித்து வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் பின்வருமாறு தெரிவித்தார்:-

நீண்ட நாட்களாக யாழ். குடாநாட்டிற்கான வெளியூர் தபால்கள் வராமை குறித்து மக்கள் தபால் திணைக்களத்தின் மீது அதிருப்தி அடைந்துள்ளது குறித்து தபால் மா அதிபருக்கு அவசர தகவல் ஒன்றை (நேற்று) அனுப்பி வைத்துள்ளேன்.

ஒக்டோபர் 22 ஆம் திகதிக்குப் பின்னர் தபால் பொதிகள் எந்தக் கப்பலிலும் வராதது குறித்து உடனுக்குடன் தபால் மா அதிபருக்கு முறையிடப்பட்டது. அண்மையில் கொழும்பு சென்ற அரச அதிபரிடமும் இது சம்பந்தமாகச் சொல்லி அனுப்பினேன் என்றார். (அ-3-162-17)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
வரவு செலவுத் திட்டம் 1994

1994 ஆம் ஆண்டிற்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத்திட்டம், 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் [அத்தியாயம் (252) (212) (பி)] பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 14-12-1993. (சி/6713)

# கண்ணீர் அஞ்சலி

## வே. செல்வகுலசிங்கம்

12-12-1993 இல் அமரரான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன கோப்பாய் தொகுதி அமைப்பாளர்

வே. செல்வகுலசிங்கம்

அவர்களின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன பிராந்திய அலுவலக வெளிக்கள ஊழியர்கள்,

(28444)

மலிவு விற்பனை

நத்தார் புதுவருட பண்டிகை நாட்களை முன்னிட்டு
01 - 12 - 1993 — 31 - 12 - 1993 வரைக்கும்
எமது நிலையத்தில் சகல விதமான
புடைவை வகைகளையும்
தைத்த ஆடை வகைகளையும்
மலிவு விலையில் விசேட கழிவுடன்
பெற்றுக் கொள்ளலாம்
வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகிறோம்.

லைடன் புடைவை நிலையம்
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[சி-6576]

தொண்டமானாறு வெளிக்கள நிலையம்

வருடாந்த

## பொதுக் கூட்டம்

காலம்: 1993 — 12 — 19 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 30 மணி

இடம்: யா / ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர்

★ நிலையத் தலைவர் திரு. க. சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

உறுப்பினர்கள் தவறாது சமுகம் தருக.

நா. சுவாமிநாதன்,
செயலாளர்.

1993 - 12 - 12 [சி-6711]

# இரண்டாம் வருட நினைவஞ்சலி



மண்ணில்: 06 — 12 — 1928

விண்ணில்: 08 — 12 — 1991

## செல்லப்பா சிவஞானம் (பத்தர்)

திதி: 15-12-1993

ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

நாச்சிமார் கோயிலடி,
பழையவீதி,
கோப்பாய். (28367)

# மரண அறிவித்தல்

## கனகசபை பத்மராசா J.P.

(உரும்பிராய் - ஊரெழு முன்னாள் பட்டினசபைத் தலைவர்)

கனகசபை பத்மராசா (J.P.) காலமானார். அன்னார் மானிப்பாயைச் சேர்ந்த மலாயன் பென்சனர் கனகசபை - தங்கம்மா தம்பதிகளின் மகனும், திருமதிகள் பத்மரேகை, பூங்கொடிதேவி, நீலாம்பிகாதேவி, விமலாதேவி, வரதராசா (உயர் அதிபர், St. Benedicts College, Colombo), யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி தெய்வேந்திரராசா (Canada), ஆகியோரின் அன்புச் சகோதரரும், S.M. ஆசைப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியகலாசாலை விரிவுரையாளர், பலாலி), சு. தர்மலிங்கம், த. செல்வராசா, அ. சுவாமிநாதன் (திருமலை), திருமதி வ. பாலேஸ்வரி (Colombo), தெ. விஜயலட்சுமி (Canada) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் உரும்பராய் வடக்கு, இல்லத்தில் 14-12-1993 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி அளவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. தர்மலிங்கம்
(மைத்துனர்)

உரும்பராய். (28434)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org